(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

# இல. 3(3).] பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 ஆகஸ்ட் 09 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2019 ஆகஸ்ட் 20, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்108 (1) உறுப்புரையின் பிரகாரம் கௌரவ உச்ச நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்குச் செலுத்தும் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதோடு, 108(2) ஆம் உறுப்புரையின் மூலம் அந்த நீதிபதிகளை நியமித்த பின்னர் அவர்களுக்குச் செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரிமைகளைக் குறைக்கக்கூடாதென ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதனாலும்;

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 25 ஆம் பிரிவு திருத்தப்பட்ட இல 1190/18 ஆம் இலக்க, 2001.06.28 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஓய்வுபெறும் போது பெற்றுக்கொண்ட சம்பளத்தின் 90% ஐ ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடைவர் ஆவாரென்பதனாலும்;

உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு தனது விருப்பத்தின் பேரில் அவர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியத்தைப் போன்ற 24 மடங்கு தொகையை ஓய்வூதியப் பணிக்கொடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், நீண்ட காலமாக இந்தப் பணிக்கொடை ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படாமல் முழுமையான ஓய்வூதியத் தொகையும் மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ளது. சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிக்கொடையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிப்பதன் மீது அந்தப் பணிக்கொடையை மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிட்டுக்கொள்ளும் முறைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொருள்கோடல் செய்து, முற்பணத் தொகையாக உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பணிக்கொடையை 10 வருடங்களுக்குள் அதாவது, 120 மாதாந்த தவணைகளில் மீண்டும் அறவிட்டுக்கொள்வது அரசியலமைப்பின் 108(2) ஆம் உறுப்புரையை மீறியதாக அமையாதென்பதனாலும்;

உச்ச நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களின் ஓய்வூதியக் குறைப்பு அல்லது அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மீது தாக்கம் செலுத்தும் சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசியலமைப்பினால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதை சட்டத்துறை தலைமையதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாதலாலும்;

அவ்வாறே, அண்மையில் நீதிமன்றத் துறைக்கு உயர் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

அதற்கிணங்க, உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையை அமுலிலுள்ள சட்டத்திற்கு அமைவாக 120 மாதங்களில் மீண்டும் அறவிடப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியின் கீழ் 2019.04.26 ஆம் திகதியிலிருந்து திரு.டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன அவர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அவரது சம்பளம் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டுமென்பதனாலும்;

தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு 2019.04.26 ஆம் திகதி முதல் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் SL-4 சம்பள அளவுத்திட்டத்தின் 7 ஆவது படிமுறையில் அமர்த்தி சம்பளம் வழங்குவதற்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் அந்த சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைய வருடாந்த சம்பள ஏற்றத்தை செலுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

*

மதுவரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தீர்ப்பாளர்களை பதிவுசெய்தல் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 08 ஆம் திகதிய 2113/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53(2) மற்றும் 54(1)(அ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தகவற் செயலகம் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 29 (2)(ஈ) ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான திட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிரல் 11 ஆம் திகதிய 2118/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015/2016),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவச் சட்டத்தின் 23 பிரிவின் கீழ், 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய, 2019.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016/2017),— 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. PED 12, அத்தியாயம் 6.5.3 இன் பிரகாரம், 2018.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2015),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய, 2018.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2019.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2017.11.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2019.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2019 செப்தெம்பர் 06, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.11/' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஹஜ் யாத்திரைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,— வருடாந்தம் ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற இலங்கை பக்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும், அது தொடர்பான நிருவாக அமைப்பொன்றை தாபித்து சட்ட முறையான ஏற்பாடுகளை வகுக்கவும், அரசாங்கத்தால் "ஹஜ் யாத்திரைச் சட்டமொன்று" அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்தல்,— கண்டி மாவட்டத்தை புவியியல் ரீதியில் நோக்குகையில் கடல் பிரதேசத்திலிருந்து தூரமாக அமைந்திருப்பதனால் இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்வதற்காக கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பைக் குறைத்தல்,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பு காரணமாக சூழலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளமையால் இந்த சூழல் பாதிப்பை குறைப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகளை அகற்றுதல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கண்டி வைத்தியசாலையை இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் அனைத்தையும் அகற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் பெருவாரியாகப் பரவும் நோய்களைத் தடுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்குக்குப் பின்னர் அனர்த்தத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் வடிந்தோடியதன் பின்னர் எலிக்காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்ட பிரதேசங்களில் பொது சுகாதார பரிசோதகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதனால், அத்தகைய பெருவாரியாகப் பரவும் நோய் நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்தல்,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டுக்கு திறமையைக் கொண்டுள்ள பெரும் எண்ணிக்கையானோர் இருப்பதனால் மேற்படி ஆட்களை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்லக் கூடியவகையில் கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்துக்குரித்தாக இருந்த கரப்பந்தாட்ட விளையாட்டின் பெருமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இற்றைக்கு ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளிலிருந்து உருவாகிய திறமைவாய்ந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெளிப்படுத்திய திறைமைகளின் காரணமாக புத்தளம் மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு மூலம் பெருமையானதோர் இடம் கிடைத்திருந்த போதிலும், இன்றளவில் அந்த நிலைமையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால், மீண்டும் அந்தப் பெருமையை புத்தளம் மாவட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல்,— மக்களின் போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான புரதச் சத்தை பெற்றுக் கொடுக்கவும், வருடாந்தம் ரின் மீன் இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேலும் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அனைத்து வளங்களும் புத்தளம் மாவட்டத்தில் இருப்பதாலும், அம்மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபம் வரை நீடித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மிக முக்கியமானவையாக உள்ளதாலும், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டம் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதாலும், அந்த அபிவிருத்தி வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தற்போது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை நீடிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வடமேல் மாகாணத்தில் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக மருத மர நடுகைக் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— மண்ணில் உள்ள நீரைப் பாதுகாக்கும் ஆற்றலைப்போன்றே மண்ணரிப்பினை குறைக்கும் பண்புடைய நீண்ட ஆயுட்காலத்தைக்கொண்ட மருத மரத்தை வடமேல் மாகாணத்தின் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக நடுகைசெய்யும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— பத்தலங்குண்டு தீவுவாசிகளான மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டிக் குடாநாட்டுக்கு அருகில் உள்ள பிரதான தீவுகளிலொன்றான பத்தலங்குண்டு தீவைச்சேர்ந்த மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகள் இற்றைவரை முறையான கவனத்திற்கு இலக்காகவில்லை என்பதால், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அம்மக்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— தற்பொழுது உலகில் நீர்வாழ் தாவரங்களுக்கு பெருங் கேள்வி நிலவுவதோடு, அதன் மூலம் எமது நாட்டுக்கு பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய பரந்துபட்ட வாய்ப்பு உருவாகியுள்ளதோடு, அண்மையில் ஜப்பான் நாட்டு நிபுணர்களால் தமது ஆராய்ச்சி அறிக்கையொன்றில் நீர்வாழ் தாவர வளர்ப்புக்கு புத்தளம் மாவட்டத்தின் கரையோரம் சார்ந்த பிரதேசம் மிகவும் உகந்ததெனச் சுட்டிகாட்டியுள்ள பின்னணியில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றைப் புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல்,— வடமேல் மாகாணத்தில் தற்போது புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளமையினால் அந்த நோயாளிகளுக்காக வடமேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலையொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை ஒன்றைத் தாபித்தல்,— இலங்கையின் பிரதான சிறுவர் வைத்தியசாலையாகிய றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் காணப்படுகின்ற பாரிய இட நெருக்கடியைக் குறைப்பதற்காகவும் வட மேல், வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலை ஒன்றைத் தாபித்தல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தினை ஒரு சுற்றுலா வலயமாக முன்னேற்றுவதற்கு எதிர்பார்ப்பதால் இக்கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான மனித வளத்தை பயிற்றுவிப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலையொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்பிட்டி சார்ந்த பிரதேசங்களில் பனைக் கைத்தொழிலை ஊக்குவித்தல்,— வட மேல் மாகாணத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் பனை சார்ந்த கைத்தொழில் கடந்த சில வருடங்களாக பெரும் சரிவை சந்தித்துள்ளதால், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம், எதிர்காலத்தில் கல்பிட்டி பிரதேசத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு நேர் ஒத்ததாக அப்பிரதேசத்தில் பனைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழிப் பண்ணை உரிமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற 'பற்றரி கேஜ்' முறைமையை நிறுத்துதல்,— இலங்கை பண்டைய காலந்தொட்டு உயிரினங்கள் மீது அன்பு செலுத்துகின்ற பௌத்த நாடாக விளங்கிய போதிலும், இன்றளவில் சில கோழிப் பண்ணையாளர்கள் பயன்படுத்துகின்ற பற்றரி கேஜ் முறைமை காரணமாக விலங்குகள் பெரும் சித்திரவதைக்குள்ளாவதனாலும், அதிக முட்டை உற்பத்தியின் மூலம் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களின் தொழில்கள் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணத்தினாலும், மேற்படி மனிதாபிமானமற்ற முறைமையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வருடாந்தம் பால் மா இறக்குமதிக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதுடன், இப்பணத்தை எமது நாட்டிற்குள்ளேயே சேமித்துக்கொள்ள முடியுமெனில் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையுமென்பதால் பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மாவட்டம் மிகவும் பெருமைவாய்ந்த வரலாற்றிக்கு உரிமை கோரும் தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பல இடங்களைக் கொண்டதொரு மாவட்டமாக இருப்பதுடன், பண்டைய காலத்தில் குருநாகல், தம்பதெனிய மற்றும் யாப்பகுவ போன்ற இராச்சியங்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்திருந்ததெனினும் தற்போது இந்த புராதன இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் மேற்படி தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.33/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல்,— எந்தவொரு நாட்டிலும் வெற்றிகரமான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று காணப்படுவது அந்த நாட்டில் வாழும் பிரசைகளுக்கு முக்கியமாகும் என்பதுடன், இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக ஓய்வூதிய முறையொன்று அல்லது ஊழியர் சேமலாப நிதிய முறையொன்று நடைமுறையில் இருந்த போதிலும், நாட்டில் முறைசாரா துறையிலுள்ள ஊழியர்களுக்காக அத்தகைய சமூக பாதுகாப்பு முறையொன்று நடைமுறையில் இல்லாமையால், அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் சிறுநீரக நோயாளிகளுக்காக வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல்,— வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுநீரக நோய் பாரியளவில் அதிகரித்துள்ளமையால், சிறுநீரக நோயாளர்களுக்காக வடமேல் மாகாணத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் தலசீமியா நோயாளர்களுக்கென வைத்தியசாலையொன்றைத் தாபித்தல்,— அண்மைக் காலத்தில் இலங்கையில் அதிக எண்ணிக்கையான தலசீமியா நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருப்பது குருநாகல் மாவட்டத்திலாகும் என்பதுடன் இதுவரை மேற்படி நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான தனியான வைத்தியசாலையொன்றை தாபிக்கப்படாமையினால் மேற்படி நோயாளிகளுக்கு தனியான வைத்தியசாலையொன்றை குருநாகல் மாவட்டத்தில் தாபிக்க வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான விகாரைகள் காணப்படுவதும், அதிகப்படியான பிக்குமார் வசிப்பதும், கூடுதலான பௌத்தர்கள் வாழ்வதும் மற்றும் அதிகளவான சாசன பாதுகாப்பு அதிகார மன்றங்கள் நடைமுறையில் உள்ளதுமான வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

பா. 37/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகளையும் காணிகளையும் இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 38/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள சந்தைகளுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8,394 குடும்பங்கள் பாரிய நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு அலகொன்றைத் தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற உளநல ஆலோகர்களை அல்லது போசகர்களை நியமித்தல்,— தற்போது பரவலாக காணக்கூடியதாக உள்ள இளைஞர் யுவதிகள், மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொள்ளும் போக்கினை தடுப்பதற்கு அனைத்து அரச கல்வி நிறுவனங்களுக்கும் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்கள், போசகர்கள் நியமிப்பட வேண்டுமென அல்லது மேற்படி கல்வி நிறுவனங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உளநல ஆலோசனை தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல்,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூலம் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பீடமொன்றை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு மேற்படி முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/ '19

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கொலொன்னாவ மாநகரசபையை நிறுவுதல்,— கொழும்பு நகரத்தையும் அண்டிய நகரங்களையும் நிர்வகிப்பதற்காக கொழும்பு, கடுவெல மற்றும் கோட்டே எனும் மூன்று மாநகரசபைகள் நிலவியபோதிலும், இந்த மூன்று மாநகரசபை ஆளுகைப் பிரதேசங்களினதும் எல்லையில் அமைந்துள்ள கொலொன்னாவ தேர்தல் தொகுதி இரண்டு நிர்வாக அலகுகளான கொலொன்னாவ நகரசபை மற்றும் கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருவதால் ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேறுபாடுகளைத் தோற்றுவிக்க இது காரணமாக அமைந்துள்ளதோடு சுற்றுப்புறத்தில் நிலவுகின்ற மாநகரசபைகள் நிர்வாகத்தின் வினைத்திறனின்பேரில் துரித அபிவிருத்தியை இன்றளவில் அடைந்துள்ளமையால், ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு கொலொன்னாவ நகரசபையையும் கொட்டிகாவத்த – முல்லேரியா பிரதேச சபையையும் ஒருங்கிணைத்து கொலொன்னாவ மாநகரசபை நிறுவப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வெற்றிலை செய்கையை மேம்படுத்தல்,— கம்பஹா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற அனேகமானவர்களின் வாழ்வாதாரமாகிய வெற்றிலை செய்கையானது நாட்டுக்கு அந்நியசெலாவனியை ஈட்டித் தருகின்ற விவசாயப் பயிர் என்பதோடு, இலங்கையிலிருந்து வெற்றிலையை கொள்வனவு செய்கின்ற பிரதான நாடொன்றாகிய பாகிஸ்தான் அண்மையில் அந்நாட்டுக்கு இறக்குமதி செய்கின்ற வெற்றிலைக்கு விதித்துள்ள வரி காரணமாகவும், உள்நாட்டு பயிர்ச்செய்கைக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற பல விடயங்கள் காரணமாகவும், உள்நாட்டில் வெற்றிலை விலை மிகவும் குறைந்துள்ள பின்னணியில் வெற்றிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகளும் ஒழுங்கீனமாகியுள்ளதாலும் இத்தகைய நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள வெற்றிலை செய்கையாளர்களை மேம்படுத்தவும், தேவையான இறக்குமதி திசைகளை கண்டறிவதற்கும் அவசியமாகின்ற அரசாங்கத்தின் தலையீட்டை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதன் மூலமாக வெற்றிலை செய்கையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 50/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்ட பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவித்தல்,— நாட்டில் இயங்கும் வர்த்தக வங்கிகளினால் நாட்டின் பிரசைகளுக்கு பல்வேறு தேவைகளுக்காக கடன் வழங்கும் போது ஆதனப் பிணைகளும் தனிநபர் பிணைகளும் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் இவ்விடயத்தில் பிணையாளி கடன்பெறுனருக்கு உதவியாக அதைச் செய்தாலும் ஏதேனும் காரணத்தால் அவ்வாறான கடனாளிகள் கடனை மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடனாளி உள்ளிட்ட பிணையாளிகளின் பெயர்களும் கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்படுவதால் பிணையாளிக்கு பாரிய அநீதி ஏற்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் சார்ந்த பிரச்சினை தீர்க்கப்படும் வரை பிணையாளிக்கு வங்கிக் கடனொன்றை பெற்றுக்கொள்ள இயலாத நிலையொன்று ஏற்படுவது மாத்திரமின்றி புதிய தொழில்முயற்சியாளர்கள் உருவாகுவதற்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் பாதகமான முறையில் தாக்கம் ஏற்படுவதால் பிணையாளிகள் சார்பாக நெகிழ்ச்சிமிக்கதொரு கொள்கையினை பின்பற்றி கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்டுள்ள பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் உயர்கல்வி நிறுவனங்களை உயர் தரத்துடன் பேணிச் செல்லும் நோக்கில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்,— இலங்கையில் பல தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் தாபிக்கப்படும் போக்கு காணப்படுவதோடு முறையான கல்வியானது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உதவியளிப்பதனால் தனியார் கல்வி நிறுவனங்களின் உருவாக்கமானது பல துறைகளில் நாட்டிற்கு சாதகமாக அமைகின்ற போதிலும் குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுத்தரப்படுகின்ற சேவைக்குரிய தரம் பேணப்படுகின்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துடன்கூடியதாக பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியம் என்பதனால் அனுபவம் வாய்ந்த புத்தி ஜீவிகளினதும் கல்வியியலாளர்களினதும் தலையீட்டின் கீழ் உரிய பாடநெறிகளுக்கான உள்ளடக்கத்தினை ஆராய்ந்து தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வழங்கப்படுகின்ற சேவையினை உயர் தரத்துடன் பேணிச்செல்வதற்காக தற்போது காணப்படுகின்ற சட்ட முறைமையானது பலம் பொருந்தியதாக அமையவில்லை என்பதால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தினை துரிதமாகத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் நிதி நிறுவனங்களைப் பேணிச் செல்வதற்கு ஏற்புடைய சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக பண வைப்பாளர்களைப் பாதுகாத்தல்,— தனியார் நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்யும்போது பண வைப்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் தோன்றுவதாலும், பண வைப்பாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் நிதிக் கம்பனிகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய சட்ட ஏற்பாடுகள் இன்மையாலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் திருத்தங்களையும், வலுவிழந்த சட்டத்தைப் பலப்படுத்தும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு, அதற்கு உதவியாக 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் மற்றும் 19 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) ஆகிய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக நாட்டினுள் பலம் வாய்ந்த நிதிப் பிரிவொன்று கட்டியெழுப்பப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.53 / '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— உரிய தரத்தைக் கொண்ட சிறு ஏற்றுமதி பயிர்களை உற்பத்தி செய்தல்,— சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தி உரிய தரமின்றி மேற்கொள்ளப்படுவதால் பயிர்செய்கையாளர்களுக்கும் நாட்டுக்கும் பாதகமான தாக்கம் ஏற்படுவதோடு, அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு ஏற்றுமதிகளை அதிகரிப்பது உந்துசக்தியாக உள்ள போதிலும் இலங்கையின் சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு சர்வதேசத்தில் காணப்பட்ட நற்பெயர், கொறக்கா புளிக்கு யூரியா கலத்தல் போன்ற மோசடியான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதோடு எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு நிலவிய சர்வதேச கேள்வி குறைந்துள்ளதால் உள்நாட்டு விலையும் குறைந்துள்ள பின்னணியில் இந் நிலைமையினை உடனடியாக மாற்றி உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களின் தரத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தொழில் முயற்சி வங்கி முறையை அறிமுகம் செய்தல் மற்றும் தாபித்தல்,— நாடு பூராகவும் அமைந்துள்ள வணிக வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களை உற்சாகப்படுத்துவதற்காக வழங்கப்படும் நிதி அனுசரணை போதியதாக அமையாமையால், உலகில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் புழக்கத்தில் உள்ள தொழில்முயற்சி வங்கி முறைமையை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதன் மூலம் புதிய தொழில்முயற்சியாளர்களின் உருவாக்கத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த முடியும் என்பதுடன், புதிய கருத்துக்களுடன் வங்கிக்கு வருகை தரும் இளைய தொழில்முயற்சியாளர்களது தேவைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு நிதி வசதியை மாத்திரமன்றி வர்த்தக அறிவையும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் வழங்குதல் இந்த வங்கி முறைமையிலுள்ள விசேட அம்சமாக காணப்படுவதனாலும், இதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புகளுடன் தேசிய உற்பத்தியும் அதிகரிப்பதனால் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவியாக அமைவதனாலும் தொழில்முயற்சி வங்கி முறையை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— ஆயுர்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை கண்காணித்தல்,— நாட்டில் பல இடங்களில் ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் இடங்கள் அதிகளவில் திறக்கப்படும் போக்கு காணப்படுவதுடன் தொழில்முயற்சியாளர்கள் உருவாகுதல் நாட்டிற்கு நன்மைபயப்பதாக காணப்பட்ட போதிலும், இதனால் சமூகத்திற்கு நன்மை ஏற்பட வேண்டுமென்பதால், அநேகமான ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களில் இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் தடுப்பதற்கும் இதன் மூலம் சமூக ரீதியான நன்மைகளுடன் சிறந்த சூழலை உருவாக்குவதற்கும் அதிகாரமுள்ள நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— "இந்திய தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட இனப் பிரிவினர் எதிர்கால சனத்தொகை மதிப்பீட்டின் போது "மலையக தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.— இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ள இந்தியர்கள் "இந்திய தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதுடன் இன்று இவர்கள் "மலையக தமிழ்" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு இலங்கை பிரசாவுரிமையை பூரணமாக அனுபவித்து வருகின்ற போதிலும் "இந்திய தமிழ்" என்று அவர்களை அடையாளப்படுத்துவதன் மூலம் அவர்களின் இலங்கைப் பிரசாவுரிமை கேள்விக்கு இடமாகின்ற நிலை காணப்படுவதனால், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சனத்தொகை மதிப்பீடுகளின் போது இந்த இனப் பிரிவினரை "மலையக தமிழ்" எனும் தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 57/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்றினைத் தாபித்தல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— இலங்கையில் தற்போது மிக வேகமாகப் பரவிவரும் ஆக்கிரமிப்பு தாவர வகைகளின் பரவுதலை இல்லாதொழிப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையில் தற்போது ஆக்கிரமிப்பு தாவர வகைகள் பல பரவி வருவதோடு ஒருசில அமைப்புக்கள் மற்றும் நபர்களால் நாட்டில் பாதைகளின் இருமருங்கிலும், மயான பூமிகளிலும் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகிய பொது இடங்களிலும் நாட்டப்பட்ட அக்கேஷியா போன்ற மரங்களினால் தேன் கூட்டங்களின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் தாவர இனங்களைப் போன்றே உயிரினங்களினதும் வாழ்விற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான ஆக்கிரமிப்பு தாவர வகைகளினது பரவலை தடுத்து முழுமையாக ஒழிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறுதோட்ட உரிமையாளர்களாக நியமித்து தொழிலாளர்களுக்கு தோட்டங்களின் உரிமையைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,— இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் துறைக்கு நீண்டகால வரலாறு காணப்படுவதுடன், கடந்த 25 வருட காலப்பகுதியினுள் ஒயில் பாம் உட்பட புதிய பயிர்ச்செய்கைகள் பெருந்தோட்டத்துறையில் நுழைந்து இருப்பதுடன் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறையின் திறனற்ற முகாமைத்துவம் காரணமாக இத்துறையானது வீழ்ச்சிக்கு உள்ளாகி தொழிலாளர்களுக்கு கூட நம்பிக்கையுடன் தமது தொழில்களில் ஈடுபடுவதற்கான பொருளாதார சமூகச்சூழலொன்று அங்கு காணப்படாமையினால், எமது நாட்டிலே பிரதான ஏற்றுமதி வருமானத்துறையாகிய பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தனியார் மயப்படுத்துகையில் இருந்து அகற்றி அரச தலையீட்டின் கீழ் புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றியமைத்து தொழிலாளர்களுக்கு சிறு தோட்டங்களைப் பகிர்ந்தளித்து அவற்றை நிலைபேறாக நடாத்திச் செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— திரைப்படக் கல்லூரியொன்றைத் தாபித்தல்,— இலங்கையின் திரைப்படக் கைத்தொழிலானது தற்போது 70 ஆண்டுகளைக் கடந்திருப்பதோடு சர்வதேச திரைப்பட விழாக்களை வெற்றிபெறக்கூடிய திறமைமிக்க திரைப்படப் பணிப்பாளர்கள், நடிகர், நடிகைகள் உட்பட படைப்பாளிகளை உருவாக்க இலங்கைக்கு முடிந்துள்ள போதிலும், அது ஒரு பாடமாக எதிர்கால சந்ததியினருக்கு முறைப்படி எடுத்துச்செல்ல எமது நாட்டுக்கு இதுவரை திரைப்படக் கல்லூரியொன்று இல்லாமையினால் தொழில்சார் திரைப்படத் துறையொன்றை உருவாக்கிக்கொள்ளும் நோக்கத்துடன் திரைப்படக் கல்லூரியொன்று துரிதமாக தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நவீன கலையரங்கமொன்றை தாபித்தல்,— இலங்கையில் Modern Art எனும் நவீன கலைத்துறையில் ஈடுபடுகின்ற கலைஞர்கள் எமது நாட்டில் இருப்பினும் அவர்களின் கலைப்படைப்புகளை காட்சிப்படுத்துவதற்கு நவீன கலையரங்கமொன்று இல்லாதுள்ளமை பாரிய குறைபாடாக உள்ளதுடன் அவ்வாறான கலையரங்கமொன்றின் மூலம் எமது சித்திர மற்றும் சிற்பக்கலை உள்ளிட்ட கலைப்பணி களுக்கு ஊட்டமளிக்கப்படுவதுடன், சுற்றுலாக் கைத்தொழிலின் முன்னேற்றமும் இடம்பெறுவதால் அவ்வாறான கலையரங்கமொன்றை (Modern Art Gallery) கொழும்பு நகரைச் சார்ந்ததாகத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.65/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— இலத்திரனியல் கழிவுப் பொருட்களை முறையாக வெளியேற்றுதல்,— இலத்திரனியல் கழிவுப் பொருட்களாக அறியப்படுகின்ற ஈ-கழிவுப் பொருட்கள் எமது நாட்டுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வருவதோடு, இன்றளவில் வருடமொன்றுக்கு சுமார் 92,000 மெற்றிக் தொன் ஈ-கழிவுப் பொருட்கள் பிறப்பிக்கப்படுவதால் 2020 ஆம் ஆண்டளவில் அது 120,000 மெற்றிக் தொன் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதோடு இலத்திரனியல் கழிவு பொருட்கள், அவற்றை வெளியேற்றுதல் மற்றும் அதில் காணப்படும் சுற்றாடல் மற்றும் சுகாதார ரீதியான தீங்குகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கும், இலத்திரனியல் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக முறைசார்ந்ததும் தொடர்ச்சியானதுமான வழிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/ '19

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— சர்ச்சைக்குரிய "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனத்தை அரசாங்கத்துக்குச் சுவீகரித்து "மட்டக்களப்பு பல்கலைக்கழகம்" என பெயர் மாற்றம் செய்தல்,— நாட்டில் பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள ஹிரா மன்றத்தினால் தொடங்கப்பட்ட "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனம் மற்றும் அந் நிறுவனத்தின் மூலம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இன்றளவில் உயர் கல்வி அமைச்சில் பதிவு செய்வதற்கு அங்கீகாரத்தை பெறும் நோக்கத்துடன் வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனியார் உயர்கல்வி நிறுவனம் சமூகத்தில் கடும் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளதோடு இதற்கு காணி வழங்கப்பட்டுள்ள மற்றும் நிதி உதவிகள் கிடைத்துள்ள செயன்முறை உள்ளிட்ட சில செயன்முறைகள் தொடர்பாக எழுந்துள்ள விடயங்களை கருத்தில் கொண்டு ஷரியா பல்கலைக்கழகமாகவும் அறியப்பட்டுள்ள "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனத்தையும் அதனுடன் தொடர்புடைய சகல கட்டடங்களையும் அரசாங்கத்துக்கு சுவீகரித்து அரச பல்கலைக்கழகமாக மாற்றி அதற்கு "மட்டக்களப்பு பல்கலைக்கழகம்" என பெயரிடப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.67/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பயங்கரவாதிகளுடனும் பயங்கரவாத அமைப்புக்களுடனும் தொடர்புபட்டவர்களுக்கு மரண தண்டனையை வழங்குதல் மற்றும் அவர்களின் மொத்த சொத்துக்களையும் பறிமுதல்செய்தல்,— சர்வதேச அல்லது உள்நாட்டு பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்கள், அத்துடன் பயங்கரவாத அமைப்புகள், செயற்பாட்டாளர்களுடன் நேரடி அல்லது மறைமுகமாக உதவிபுரிகின்ற, துணைபுரிகின்ற, உடந்தையாயிருக்கின்ற ஆட்களின் செயற்பாடுகள் பற்றி நீதிமன்றத்தால் நிரூபிக்கப்பட்டவிடத்து, அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல்செய்து மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சகல மத்ரஸா பாடசாலைகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் அனைத்தையும் கல்வி அமைச்சின் கீழ் பொறுப்பேற்றுக் கொள்ளல்,— தற்போது முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நாட்டிலுள்ள மத்ரஸா பாடசாலைகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் அனைத்தையும் உடனடியாக கல்வி அமைச்சின் கீழ் பொறுப்பேற்றுக் கொண்டு இந்தப் பாடசாலைகளில் ஒரு பாடமாக சிங்கள வரலாற்றைக் கற்பிப்பதற்கும், அப்பாடசாலைகளை கல்வி அமைச்சின் கீழ் கண்காணிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 69/'19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பாடசாலைகளையும் மதங்களுக்கமைய மற்றும் இனங்களுக்கமைய வகைப்படுத்தாது கலவன் பாடசாலைகளாக மாற்றியமைத்தல்,— இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பாடசாலைகளையும் எதிர்வரும் ஆண்டு முதல் படிப்படியாக கலவன் பாடசாலைகளாக மாற்றுவதற்கும் சிங்களம், தமிழ், முஸ்லிம், கத்தோலிக்கம் என்றவாறு பாடசாலைகளைத் தாபிக்க எதிர்காலத்தில் வாய்ப்பளிக்காமல் இருப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு இன அடிப்படையில் குறிப்பிட்ட சதவீதத்தின் கீழ் பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இனம் மற்றும் சமய அடிப்படையில் அரசியல் கட்சிகளைப் பெயரிடுவதனைத் தடை செய்தல்,— தற்போது எழுந்துள்ள நிலைமையினை கவனத்திற் கொண்டு இலங்கையில் இனம் மற்றும் சமய அடிப்படையில் அரசியல் கட்சிகளைப் பெயரிடுவதனைத் தடை செய்து தற்போது அவ்வாறு இனத்தினதோ அல்லது சமயத்தினதோ பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகளினது பெயர்களையும் மாற்றம் செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/'19

கௌரவ திலங்க சுமதிபால,— "பெட்டிக்கலோ கெம்பஸ் பிரைவேற் லிமிற்றெட்" நிறுவனத்தை அரசாங்கம் சுவீகரித்து அரச பாதுகாப்பு பலக்லைக்கழகமாக மாற்றுதல்,— உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இலங்கையின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக தோன்றியுள்ள பாரதூரமான நிலைமையின் கீழ் குறிப்பாக பெரும்பான்மை சமுதாயத்தினரின் பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கையை உறுதிசெய்வதற்காகவும், இலங்கைக்கு எதிர்காலத்தில் அத்தகைய சந்தர்ப்பமொன்று ஏற்படாதிருக்கவும், குறிப்பாக தீவிரவாத கருத்துடையவர்களிடமிருந்து வடக்கு கிழக்கு பிரதேசங்களைப் போன்றே ஒட்டுமொத்த இலங்கையையும் பாதுகாத்துக்கொள்ளவும், "பெட்டிக்கலோ கெம்பஸ் பிரைவேற் லிமிற்றெட்" நிறுவனத்தை பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்து அரச பாதுகாப்பு பல்கலைக்கழகமொன்றாக மாற்றவேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.72/'19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பண்டுவஸ்னுவர இராசதானியை சுற்றுலாத்திட்டத்தில் உள்ளடக்கி அபிவிருத்தி செய்தல்,— இலங்கையின் பழைமைவாய்ந்த இராசதானியொன்றாகக் கருதப்படுகின்ற பண்டுவஸ்னுவர இராசதானியை சுற்றுலாத் திட்டத்தினுள் உள்ளடக்கி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.73/'19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரஜைகளின் சுகாதார உரிமையை அரசியலமைப்பில் உள்ளடக்குதல்,— இலங்கையில் சகல பிரஜைகளுக்கும் தாம் பீடிக்கப்படும் நோய் அல்லது முகம் கொடுக்க வேண்டி நேருகின்ற விபத்தின்போது அரசாங்கச் செலவில் இலவசமாக சிகிச்சை பெறுவதற்கான உரிமையினையும், தொற்றுகின்ற அல்லது தொற்றாத நோய்களைத் தவிர்பதற்குத் தேவையான தடுப்பு மற்றும் ஆலோசனைகளைப் போன்றே புனர்வாழ்வளிப்பு சேவைகளை தரமானதாகவும் நியாயமானதாகவும் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் ஏற்றுக்கொண்டு, இது இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்வாங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.74/ '19

கௌரவ ரொஷான் ரணசிங்க,— இலங்கைப் பிரஜைகளுக்கு திருமணம் பற்றிய பொதுச் சட்ட விதிகளை உருவாக்குதல்,— இலங்கை வாழும் பல்லின சமூகங்களை பிரிக்கும் வகையிலான சட்டங்கள் நாட்டில் அமுலில் இருப்பதால் அவற்றை சீர் செய்யுமுகமாக குறிப்பாக திருமணச் சட்டம் சகல பிரஜைகளுக்கும் பொதுவான சட்டமாக இருக்க வேண்டுமெனவும், கண்டி திருமணச் சட்டம், முஸ்லிம் திருமணச் சட்டம் என வித்தியாசப்படக் கூடாதெனவும், பிரஜை ஒருவர் ஒரு திருமணத்தை மாத்திரமே செய்துகொள்ள முடியுமெனவும் அதனை 18 வயது பூர்த்தியானதன் பின்னர் செய்துகொள்ள முடியுமென்றவாறு இலங்கை பிரஜைகளுக்கு திருமணம் பற்றி பொதுவான சட்டவிதிகளை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2019 ஒக்டோபர் 08, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

31/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1978 ஆம் ஆண்டுடன் ஆரம்பமான முதலாவது பாராளுமன்றத்திலிருந்து எட்டாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றம் தொடர்பிலும் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவைகளில் இருந்த அமைச்சரவை, இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கையானது, குறித்த அமைச்சரவையில் இருந்த மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையின் நூற்றுவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iv) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்திற்கு ஏற்றவாறு நியாயமான பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் பெண்களுக்குக் கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

91/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டுக்கு தகரத்தில் அடைத்த மீனை இறக்குமதி செய்யும் நாடுகள் யாவை;

(ii) மேற்படி தகரத்தில் அடைத்த மீனை இறக்குமதி செய்யும் இந்நாட்டுக் கம்பனிகள் யாவை;

(iii) 2018 ஆம் ஆண்டில் நுகர்வுக்கு ஏற்புடையதல்லாத தகரத்தில் அடைத்த மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் யாவை;

(iv) மேற்படி தகரத்தில் அடைத்த மீனை இறக்குமதி செய்த கம்பனிகள் மற்றும் அளவுகள் வெவ்வேறாக யாது;

(v) மேற்படி இறக்குமதி நடவடிக்கைகளுக்கு நுகர்வோர் அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா;

(vi) இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுக்கு ஏற்புடையதல்லாத தகரத்தில் அடைத்த மீன்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(vii) இதற்கு முன்னரும் நுகர்வுக்கு ஏற்புடைதல்லாத தகரத்தில் அடைத்த மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அச்சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்த கம்பனிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

147/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள உள்நாட்டுப் பால்மா தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்தத் தொழிற்சாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) நல்லாட்சி அரசு ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் இதுவரை அந்த தொழிற்சாலைகளின் உற்பத்தி அளவு ஒவ்வொரு வருடத்திற்கமைய எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது ஊவா மாகாணத்தின் உள்நாட்டுப் பால்மா உற்பத்தித் தொழிற்சாலைகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

209/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2017ஆம் ஆண்டில்,

(i) புகையிரதத்தைப் பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கை;

(ii) பயணிகள் போக்குவரத்தினால் கிடைத்த வருமானம்;

(iii) அச்சிடப்பட்ட புகையிரத பயணச் சீட்டுக்களின் எண்ணிக்கை;

(iv) புகையிரத பயணச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட தொகை;

யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பயணிகள் போக்குவரத்திற்காக நாளொன்றில் ஈடுபடுத்த வேண்டிய புகையிரத பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை;

(ii) பொதுவாக நாளொன்றில் மேற்கொள்ளப்படும் பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை;

யாது என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

269/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகல மாவட்டத்தின் மெதகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

343/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கெகிராவ நகரில் அமைந்துள்ள இந்து ஆலயம் மிகப் பழமையானதும் சேதமடைந்த நிலையிலும் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் மந்தகதியில் இடம்பெறும் மறுசீரமைப்பு பணிகளை துரிதமாக மேற்கொண்டு இந்த ஆலயத்தை வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இந்து மத அடியார்களுக்கு வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

433/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிவில் விமான சேவை அதிகாரசபை ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபையின், பணிப்பாளர் நாயகம், மேலதிக பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் பிரிவுகளின் தலைமைப் பணிப்பாளர்களது வயதெல்லைகள் வெவ்வேறாக யாது;

(iv) இந்த அதிகாரசபையில் உள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது வயதெல்லைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சிவில் விமானசேவை அதிகாரிகள் ஓய்வுபெறுகையில், வெற்றிடமாகும் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு, தகைமை படைத்த இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் குழுவொன்றை ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

455/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலையில், குருநாகலையிலிருந்து கலகெதர வரையில் நிர்மாணிக்கப்படும் பகுதியின்,

(i) ஒட்டுமொத்த தூரம்;

(ii) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்தச் செலவு;

(iii) உட்பிரவேச மற்றும் வெளியேறும் வாயில்கள் அமைக்கப்படும் இடங்கள்;

(iv) நிர்மாணப்பணியை ஆரம்பிப்பதற்கும் நிறைவுசெய்வதற்கும் உத்தேசிக்கப் பட்டுள்ள திகதி;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிவேக நெடுஞ்சாலையின் மேற்குறிப்பிட்ட பகுதிக்காக இதுவரையில்,

(i) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(ii) செலுத்தப்பட்டுள்ள மொத்த நஷ்டஈட்டுத் தொகை;

(iii) செலுத்தப்படவுள்ள நஷ்டஈட்டுத் தொகை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி அதிவேக நெடுஞ்சாலையில் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

467/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) இந்த ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்தினாலும் நிர்வகிக்கப்படுகின்ற சிறுவர் பூங்காக்களின் எண்ணிக்கை யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இந்த ஒவ்வொரு சிறுவர் பூங்காவையும் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வருடாந்த ஏற்பாடுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(vi) இந்த சிறுவர் பூங்காக்களை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகளும் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

504/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்திற்குரிய மத்தியம நுவர கம்பலாத்த பிதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத்திட்டத்தில் வீடுகள் கையளிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) கையளிக்கபட்ட வீடுகளைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நபரினதும் பெயர், வீட்டு இலக்கம், வீட்டுப்பயனாளி அரச உத்தியோத்தரா, ஓய்வு பெற்ற அரச உத்தயோத்தரா என்பதையும் அறியத்தருவாரா;

(iii) வீடமைப்புத்திட்டமானது பிரதேசத்திலுள்ள காட்டு யானைகள் பயணிக்கும் யானைக் கடவைக்கு தடயேற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா;

(iv) வீட்டுப்பயனாளிகளின் உயிர்ப் பாதுகாப்பு தொடர்பில் யானை வேலியொன்றை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீடமைப்புத் திட்டத்தினை திறந்து வைத்தமை தொடர்பான விளம்பர நடவடிக்கைகளுக்காக செலவு செய்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) வீடமைப்புத் திட்டத்தினை திறந்து வைப்பதற்காக அமைக்கப்பட்ட நினைவுப் பலகைக்காக செலுத்தப்பட்டுள்ள பணம் எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

518/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.01.01 ஆம் திகதி வரை இலங்கைப் பிரசைகளால் அரச வங்கிகளிலிருந்து பெறப்பட்டுள்ள மொத்த அடகுக்கடன்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தங்கநகைகளை அடகுவைத்து பெறப்பட்டுள்ள கடனின் அளவு யாது;

(iii) தங்கநகைகளை அடகுவைத்து ரூபா இரண்டு இலட்சத்தைவிடக் குறைவாக கடன் பெற்றுள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) மேலே (i) இல் குறிப்பிட்ட கடனின் அளவு அக்காலப்பகுதிக்குள் விநியோகித்துள்ள ஒட்டுமொத்த கடனின் சதவீதமாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

619/ '18

கௌரவ மஹிந்தானந்த அழுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கண்டி மாவட்டத்தின், கம்பளை - தொலொஸ்பாகே வீதியை இரு ஒடு பாதைகளாக விரிவாக்கும் பொருட்டு 2012 ஆம் ஆண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது குருந்துவத்தை தொடக்கம் வெலிகந்த வரையிலான 7 கிலோமீட்டர் தூரம் காப்பற் இடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) 2015 ஜனவரி தொடக்கம் மூன்றரை வருட காலப்பகுதியில் இந்த வீதியில் எதுவித வேலைகளும் இடம்பெறவில்லை என்பதையும்;

ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) பெருமளவிலான வாகனங்களும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பயன்படுத்துகின்ற இந்த வீதியில் 4 கிலோமீட்டர்களுக்காக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

655/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) திருகோணமலை - கண்டி வீதியின் 6 ஆம் கட்டை தொடக்கம் திருகோணமலை - அனுராதபுரம் வீதியில் கிண்ணியா வரை ஓடுகின்ற திருகோணமலை வெளிச்சுற்றுவட்டப் பாதையின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2013.07.18 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 6 ஒட்டப்பாதைகள் வரை அதிகரிக்கக்கூடிய வகையில் 4 ஓடு பாதைகளுடன் இந்த வீதி நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) 2015 சனவரி மாதமாகின்ற வேளையிலும் வீதி வெட்டப்பட்டு சரளைக் கற்கள் இடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரையும் கற்களைப் பரவி காபட் இடுவதற்கு முடியாது போனமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தற்போது நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான ஒப்பந்தகாரர் கம்பனி யாதென்பதையும்;

(iv) இந்த வீதிக்கான நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

676/ ’19

கௌரவ சந்திம கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 368 இலட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டு NELSIP கருத்திட்டத்தின் மூலம் கெக்கிராவ விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டது என்பதையும்;

(ii) கருத்திட்டத்தில் இடம்பெற்ற முறைகேடுகளின் காரணமாக கருத்திட்டத்தை கைவிட நேர்ந்தது என்பதையும்;

(iii) கெக்கிராவ பிரதேச இணைப்பாக்கக் குழுவினால் அனுராதபுரம் உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் மற்றும் NELSIP கருத்திட்டத்தின் பணிப்பாளரின் மூலம் தரக் கட்டுப்பாடு, தரநியமம் மற்றும் செலவிடப்படுகின்ற தொகை தொடர்பாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ள போதிலும் அத்தகையதொரு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தில் சுமார் 35 இலட்சம் ரூபாவிலான ஊழல் மோசடி இடம் பெற்றுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச சபைத் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் என்போரின் தேவையின் அடிப்படையில் மேற்படி விளையாட்டு மைதானத்தினை பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வழங்குவதற்கும் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவதற்கு முன்னர் இசைக் கச்சேரி ஒன்றினை நடாத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) இச்செயன் முறையின் மூலம் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை மூடி மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் விளையாட்டு மைதானத்தினை பொது மக்களுக்கு ஒப்படைக்கும் வரை பயன்படுத்தாமல் தாமதப்படுத்துவதற்கும் கட்டளையிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

688/ ’18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 முதல் 2017 ஆம் ஆண்டு வரை கொழும்பு, காலி, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா மாவட்டங்களின் தேசிய பாடசாலைகளின்;

(i) 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளி யாதென்பதையும்;

(ii) புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் 6 ஆம் ஆண்டுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 5 மற்றும் 6 ஆம் ஆண்டுகளின் சமாந்தர வகுப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 6 ஆம் ஆண்டுக்கு புலமைப்பரிசில் பெறுபேறுகளின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படாத ஆரம்பப் பிரிவிலிருந்து வந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 6 ஆம் ஆண்டு மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் புலமைப்பரிசில் பெறுபேறுகளின் கீழ் சேர்ந்துள்ள மாணவர்களின் வீதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பார?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2019 ஒக்டோபர் 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

22/ ’18

கௌரவ ஹேஷான் விதானகே,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இது வரை பதிவுசெய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பிரதிப் பயன்கள் யாவை என்பதையும்;

(iii) அறநெறிக் கல்வியை மேம்படுத்த மேற்படி தன்னார்வ அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

92/ ’18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அழிக்கப்பட்டுள்ள தொல்லியல் இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களின் பெயர்களை குறிப்பிடுவாரா;

(iii) மேற்படி தொல்லியல் இடங்களை அழிப்பதற்கான காரணங்கள் யாவை;

(iv) சம்பந்தப்பட்ட தொல்லியல் இடங்களை அழித்த ஆட்கள் இனங்காணப்பட்டுள்ளனரா;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவை;

(vi) இனங்காணப்படாத ஆட்களால் அழிக்கப்பட்டுள்ள தொல்லியல் இடங்களின் எண்ணிக்கை யாது;

(vii) நாடொன்றின் வரலாற்றுப் பெருமையை பாதுகாக்கின்ற தொல்லியல் இடங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை குறிப்பிடுவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

346/ ’18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் மஹாவலி H வலயத்தில் அமைந்துள்ள கல்னேவ பேரூந்துத் தரிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அது பாவனையாளர் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் திருத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

434/ '19

கௌரவ கனக ஹேரத்.— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பின்னவல யானைகள் சரணாலயத்தை பார்வையிடுவதற்காக ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைதருகிறார்கள் என்பதையும், இந்த நிறுவனத்தினால் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்துக்கு அதிகூடிய வருமானம் கிடைக்கப்பெறுகிறது என்பதையும் அவர் அறிவாரா;

(ii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் பின்னவல யானைகள் சரணாலயத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு காலாண்டின்படி வெவ்வேறாக யாது;

(iii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ஒவ்வொரு வருடத்துக்கும் காலாண்டுக்கும் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பின்னவல யானைகள் சரணாலயத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தரும் சுற்றுலாப்பயணிகளுக்கு, யானைக் குட்டிகளுக்கு பால் ஊட்டுவதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பு தற்போது நிறுத்தப்பட்டிருப்பின் அதற்கான காரணம் யாது;

(ii) இதன் காரணமாக நிறுவனத்துக்கு வருடாந்தம் ஏற்படும் நட்டம் யாது;

(iii) இலங்கைக்கு பெறுமதிமிக்க ஒரு வளமாகக் காணப்படும் பின்னவல யானைகள் சரணாலயத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவுள்ளதா;

(iv) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

608/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான,

(i) கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை;

(iii) கைத்தொழில்பேட்டைகளில் இயங்கிவருகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில்புரிகின்றவர்களின் எண்ணிக்கை;

என்பவற்றை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மத்திய மாகாணத்திற்காக,

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள் ;

(ii) மேற்படி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்ட இடங்கள்;

(iii) வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள்;

(iv) நன்மைபெறுனர்கள் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை;

(v) மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகள்;

யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நிகழ்காலத்தில் இணையத்தளத்தின் ஊடாக இலத்திரனியல் தொழில்முயற்சி களை மேற்கொள்ளும் ஆற்றல் கிராமிய பிரதேசங்களில் வசிக்கின்ற ஆட்களுக்கும் திறந்ததாக உள்ளபோதிலும் அதற்கு அவசியமான அறிவு போதுமான அளவில் வழங்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) இந்த அறிவினை முறைசார்ந்தவகையில் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

620/ '18

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதிகள் அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாவலபிட்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் நாவலபிட்டிய நகரின் வாகன நெரிசலை குறைக்கும் நோக்கில் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையினால் 300 இலட்சம் ரூபாய் செலவில் நாவலபிட்டிய நகர மத்தியில் மேம்பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா?

(ii) தற்போதைய நாவலபிட்டிய நகரசபை நிர்வாகத்தினர் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியின்றி மேற்படி அரச சொத்தினை தகர்த்து விற்பனை செய்வதற்கு உத்தேசித்துள்ளார்கள் என்பதை அறிவாரா?

(iii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட இப் பாலத்தை தங்களின் அமைச்சின் அனுமதியின்றி தகர்த்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

656/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கந்தளாய் நகரில் நீர்ப்பாசன இயந்திர வேலைத் தளத்திற்கு அருகாமை தொடக்கம் சம்பத் வங்கி அமைந்துள்ள இடம் வரையில் காணப்படுகின்ற நீர்ப்பாசன திணைக்களத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பில் சுமார் 40 கடை அறைகள் அமைந்துள்ள போதிலும் நிலத்தின் ஏக உரிமையானது வர்த்தகர்களுக்கு இல்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நிரந்தர நிர்மாணிப்புக்களுடன் வர்த்தக நிலையங்களாக தற்போது அனுபவித்து வருகின்ற மேற்படி காணித் துண்டுகளை நீர்ப்பாசன திணைக்களத்தின் உரிமையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி வியாபாரிகள் இன்று காணப்படுகின்ற நிலைமைக்கு மேற்படி காணித் துண்டுகளை முன்னேற்றியிருப்பது யுத்தம் இடம்பெற்ற கடினமான காலப்பகுதியிலேயே என்பதனால் அக்காணிகளுக்கான வணிகப் பெறுமதியை அவர்களிடமிருந்து அறவிடாமல் அனுபவிப்பினைக் கருத்திற்கொள்ள முடியாதது ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

773/ '19

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பட்டப்பின் படிப்பு பாடநெறியை கற்பதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு 2016 ஆம் ஆண்டு சனவரி முதல் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள கடன் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(ii) இக்கடனுக்கு அறவிடப்படுகின்ற வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கடன் தொகையை மீளச் செலுத்தி முடிவுறுத்துவதற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சக் கால எல்லை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கடன் தொகை வழங்கும் போது சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் வைத்துக் கொள்கின்ற பிணையங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையில் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையும் வட்டியும் எவ்வளவு என்பதையும்;

(ii) இதுவரை அறவிடப்பட வேண்டிய ஆனால் இதுவரை அறவிடப்படாத கடன் தொகையை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவையென்பதையும்;

(iii) இந்நடவடிக்கை தொடர்பாக திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2019 ஒக்டோபர் 10, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

28/'18

கௌரவ ஹேசா விதானகே,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் "சேவா பியச" அலுவலகம் ஒன்றை நிருமாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(ii) "சேவா பியச" அலுவலகமொன்றை நிருமாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

151/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய உள்ளூரதிகார சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்த பிரதிநிதிகளின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய உள்ளூரதிகார சபைகள் யாவை;

(iii) அந்த செயலமர்வுகள் நடைபெற்ற நாடுகள், நகரங்கள் மற்றும் கால எல்லைகள் வெவ்வேறாக யாவை;

(iv) இந்த ஒவ்வொரு செயலமர்விலும் பங்கேற்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி செயலமர்வுகளின் பின்னர் குப்பைகூழ முகாமைத்துவத்திற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கிய உள்ளூரதிகாரசபைகள் யாவை ;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

422/ '19

கௌரவ பத்ம உதயசாந்த குணசேக்கர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.— (2)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் Hyrax oil SduBhd கம்பனிக்கு இடையில், உராய்வுநீக்கி எண்ணெய் கலவை நிலையமொன்றை ஆரம்பித்து முன்னெடுப்பது தொடர்பிலான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட திகதி யாது;

(iii) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், உடன்பாடு எட்டப்பட்டுள்ள முதன்மை விடயங்கள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கான உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா:

(v) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், குறிப்பிட்ட கம்பனியானது ஏற்கனவே, இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் கலவை நிலையமொன்றை நிர்மாணித்துள்ளதா;

(vi) உத்தேச உராய்வு நீக்கி எண்ணெய் கலவை நிலையத்துக்கு தேவையான எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்வதற்கான உரிமம் பெறப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

557/ '19

கௌரவ சி. சிறீதரன்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் 1940 களிலிருந்து இயங்கிவந்த பிரதான எரிபொருள் சேகரிப்பு களஞ்சியசாலையானது யுத்தம் காரணமாக அழிவடைந்ததோடு அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டதென்பதனை அவர் அறிவாரா;

(ii) மேற்படி எரிபொருள் சேகரிப்பு களஞ்சியசாலைக்கு பயன்படுத்தப்பட்ட காணி தற்போது எவரின் பொறுப்பிலுள்ளதென்பதனையும்;

(iii) அக்காணி நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் குறிப்பிட்ட தரப்பினருக்கு மாற்றப்பட்டுள்ளதாவென்பதனையும்;

(iv) மேற்குறிப்பிட்ட காணியில் பிரதான எரிபொருள் சேகரிப்பு களஞ்சியசாலையை மீளத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதனையும்;

(v) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏனைய காணிகளை உடைமையாகக் கொண்டுள்ளதாவென்பதனையும்;

(vi) ஆம் எனின், மேற்படி காணிகளின் அமைவிடங்கள் மற்றும் பரப்பளவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட காணியில் இயங்கிவந்த எரிபொருள் நிரப்பு நிலையமானது ஒரு தனியார் தரப்பிற்கு சொந்தமாக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆம் எனின் அவ்வுரிமையாளரின் பெயரையும்;

(iii) மேற்படி காணி தொடர்பிலான குத்தகைக் காலத்தையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை தாபிப்பது தொடர்பிலான பச்சிப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வேண்டுகோள் மறுக்கப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென்பதனையும்;

(ii) இதுவரையிலும் இரண்டு தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மேற்குறிப்பிட்ட பகுதியில் இயங்குவதற்கு அனுமதிக்கபட்டதற்கான காரணத்தையும்;

(iii) பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடங்களையும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

609/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புஸ்ஸல்லாவ நகரத்தில் அமைந்துள்ள பௌத்த மதவழிபாட்டு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி மதவழிபாட்டு நிலையங்களின் பெயர்கள் யாவை;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் இற்றைவரை மேற்படி மதவழிபாட்டு நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

643/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்து சமுத்திர கடல்சார் அலுவல்கள் பற்றிய பிராந்திய அமைப்பு Indian Ocean Marine Affairs Cooperation (IOMC) எனும் நிறுவனம் இலங்கையில் உள்ளதா;

(ii) ஆமெனில் அதன் நோக்கங்கள் மற்றும் பணிப்பொறுப்புகள் யாவை;

(iii) அது ஒரு பிராந்திய அமைப்பெனில் அதன் அங்கத்துவ நாடுகள் யாவை;

(iv) அதன் உடன்பாடு யாது;

(v) மேற்படி உடன்பாட்டின் பிரதியொன்றை வழங்குவாரா;

(vi) மேற்படி உடன்பாடு வலுவாக்கப்பட்டிருப்பின் அந்நாடுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

686/ '18

கௌரவ கனக ஹேரத்,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர்களை பயிர் செய்துள்ள காணிகளின் அளவு மற்றும் மேற்படி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர் விளைச்சல் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) சிறிய ஏற்றுமதிப் பயிர் செய்கையாளர்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையில் சிறிய ஏற்றுமதிப் பயிர்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

779/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.04.30 ஆம் திகதி வரை சிறு தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையில் முகாமையாளராக (மனிதவள/நிருவாக) பணியாற்றிய உத்தியோகத்தரின் பெயர், பதவியில் நியமிக்கப்பட்ட திகதி, பதவிக்குரிய மாதாந்த சம்பளம் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) இவர் மேற்படி பதவியில் அமர்த்தப்படுவதற்கு முன்னர் இவ்வதிகாரசபையில் வேறேதேனும் பதவியை வகித்துள்ளாரா என்பதையும்;

(iii) ஆமெனில், பதவிகளின் எண்ணிக்கை, பதவிப் பெயர்கள் மற்றும் பதவிகள் தொடர்பில் பெற்றுக்கொண்ட மாதாந்த சம்பளம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர் அதிகாரசபையின் பதவிக்கு மேலதிகமாக வேறு அரச நிறுவனமொன்றில், திணைக்களமொன்றில் அல்லது கூட்டுத்தாபனமொன்றில் பதவி வகித்துள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட மாதாந்த கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

868/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் குவைத் நிதியமெனும் மூலமொன்றிலிருந்து கிழக்கு மருத்துவப் பீடத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆண்டில் அந்நிதி செலவிடப்படாமைமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிதி அப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

884/ '19

கௌரவ பிமல் ரத்னாயக்க,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 வறட்சி நிவாரணம் II ஆம் கட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவு மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை என்பன ஒவ்வொரு மாவட்டத்தின் பிரகாரம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அதன் பொருட்டு விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றுக்கு மத்தியில் இறுதியாக நடைமுறைப்படுத்தப்பட்ட செல்லுபடியான சுற்றறிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) செல்லுபடியான சுற்றறிக்கையின் பிரகாரம் குருநாகல் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் பிரகாரம் யாதென்பதையும்;

(ii) இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் NDRC/2018/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் குருநாகல் மாவட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த பயனாளிகள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் பிரகாரம் தனித்தனியாக முன்வைக்கப்படுமா என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iv) அதில் பொல்பித்திகம உள்ளடங்கவில்லையெனில் அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

972/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொலிஸ்மா அதிபரின் தலைமையில் கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இபலோகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ரணவிரு கிராமத்தில் தாபிக்கப்பட்டுள்ள இபலோகம பொலிஸ் நிலையம் தற்காலிக கட்டடமொன்றில் இயங்கி வருவதை அறிவாரா;

(ii) பொலிஸ் நிலையத்திற்கு பொருத்தமான நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணித்து அங்கு பொலிஸ் நிலையத்தை கொண்டுநடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1025/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 281, 282, 283 மற்றும் 284 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம், இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்காக பின்பற்றப்பட்ட பிரதான நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(ii) முன்மொழிவு இலக்கம் 284 இன் பிரகாரம் பிணையங்கள் மற்றும் இலங்கைச் செலாவணி ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்குரியதாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பங்குச் சந்தையின் வளர்ச்சியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற நியமச் சுட்டெண்களுக்கமைவாக 2000 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையின் முன்னேற்றம் பற்றிய போக்குகளைக் காட்டுகின்ற அட்டவணையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) தற்போது அசாதாரணமாக வட்டி வீதங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமையானது பங்குச் சந்தையின் அபிவிருத்திக்குத் தடையாகக் கருதப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அது தொடர்பாக கொண்டுள்ள கருத்து யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1037/ '19

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், இதுவரையில் தீர்ப்பு வழங்கப்படாததுமான மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iii) அந்த அனைத்து வழக்குகளுக்குரிய முறைப்பாட்டாளர்களின் பெயர்கள் மற்றும் வழக்கு எண்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1045/ '19

கௌரவ ஷெஹான் சேமசிங்க,— தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வலுவலகம் தாபிக்கப்பட்ட சட்டம் யாதென்பதையும்;

(iii) அதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) அதன் பணியாட்தொகுதியினர் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வலுவலகத்திற்குரிய விடயப்பரப்பு யாதென்பதையும்;

(ii) உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வருமானங்கள் கிடைக்கப் பெறுவது எவ்வழிகளில் என்பதையும்;

(iii) நிதிகளை வழங்கிய நபர்கள் வெவ்வேறாக யாவர் என்பதையும்;

(iv) செலவுச் சுருக்கம் யாதென்பதையும்;

(v) இது வரையிலும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றை நெறிப்படுத்திய நபர்கள் யாவரென்பதையும்;

(vi) இதற்கான நிதிகளை வழங்கிய அரச சார்பற்ற அமைப்புக்கள் யாவை என்பதையும்;

(vii) சகவாழ்வை மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1047/ '19

கௌரவ அநுராத ஜயரத்ன,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.03.18 ஆம் திகதி கம்பளை ஆதார வைத்தியசாலையில் புதிய திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக் கூறுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

(ii) வைத்தியசாலை வளவில் இடவசதி மட்டுப்பட்டதாக அமைவதால் வைத்தியசாலை நிர்வாகத்தினரின் வேண்டுகோளின் பிரகாரம் உத்தேச கட்டடத்தின் அத்திவாரம் ஐந்து மாடிகளுக்கு பொருத்தமான வகையில் அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டதென்பதையும்;

(iii) நிர்வாகத்தினரின் வேண்டுகோளை பொருட்படுத்தாமல் அமைச்சினால் கட்டடத்தின் அத்திவாரம் இரண்டு மாடிகளுக்கு பொருத்தமானவகையில் அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சம்பந்தப்பட்ட நிர்மாணப் பணிகளை உரியவகையில் மேற்கொள்வதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் இப்பணியை மந்தகதியில் மேற்கொண்டு வருவதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2019 ஒக்டோபர் 11, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

33/ '18

கௌரவ ஹேசா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரிவெனாக் கல்வி நிறுவனங்களுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்கையில் கவனத்திற் கொள்ளப்படுகின்ற அடிப்படை கல்வித்தகைமைகள் யாவை;

(ii) தற்போது பிரிவெனாக் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதா;

(iii) ஆமெனில் மேற்படி பற்றாக்குறை நிலவுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iv) கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விக் கூறு மூலமாக பிரிவெனாக் கல்வியை மேம்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

153/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கழிவுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கின்ற, அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் யாவை;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இந்நிறுவனங்களின் அலுவலர்கள் கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பாக வெளிநாட்டு கற்கைப் பயணங்களை மேற்கொண்டுள்ளனரா;

(iii) ஆமெனில், அவ்வலுவலர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் வெளிநாட்டுக் கற்கைகள் பற்றிய விபரங்கள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கற்கை நடவடிக்கைகளுக்கும் செலவிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) குறிப்பிட்ட கற்கைப் பயணங்களில் கலந்து கொண்ட அலுவலர்களின் அறிவு அமைச்சின் நடவடிக்களுக்காக பயன்படுத்தப்பட்ட முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

366/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான க்ரெட்வெலி தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

558/ '19

கௌரவ சி. சிறீதரன்,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்ட நகர மத்தியில் அமைந்துள்ள சதொச வியாபார நிலையமானது பிரதேச சபையின் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளதா;

(ii) சதொச கட்டடம் அமைந்துள்ள காணி எந்நிறுவனத்திற்குச் சொந்தமானது;

(iii) இந்த இடம் குறித்ததொரு நபருக்கு நீண்டகாலக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா;

என்பதை அவர் அறிவாரா?

(ஆ) சதொச வியாபார நிலையம் நடாத்திச் செல்லப்படும் இக்கட்டடத்தை,

(i) நிர்மாணிப்பதற்கு கரைச்சி பிரதேச சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(ii) இக்கட்டடத்தின் நிகழ்கால உரிமையாளரின் பெயர் என்ன;

(iii) அரச செலவில் நிர்மாணிக்கப்பட்டிருப்பின், கேள்விமனு கோரல் தொடர்பான தகவல்கள் என்ன;

(iv) கட்டட நிர்மாணத்திற்காக உறப்பட்ட செலவு எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

610/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த இரண்டு வருடங்களுள் கண்டி மாவட்டத்தில்,

(i) மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சார்ந்த சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை;

(ii) போதைப்பொருள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை;

(iii) கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி;

வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தற்போது தடைசெய்யப்பட்டுள்ள சட்டவிரோத போதைப்பொருள் வகையைச் சேர்ந்த போதைப்பொருள்களாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் அவை கொண்டுவரப்படும் நாடுகள் அடங்கிய பெயர் பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கண்டி மாவட்டத்தில், கம்பளை மற்றும் அண்மிய பிரதேசங்கள் நீண்ட காலமாக போதைப் பொருள்களை விநியோகிக்கும் மத்திய நிலையமாக இயங்கி வருவதையும், பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையும் இலக்கு வைத்து இயங்கி வரும் இந்த விநியோக வலையமைப்பு இதுவரையும் பலமான நிலையில் காணப்படுவதையும் அறிவாரா என்பதையும்;

(ii) இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்களை விரைவாக சட்டத்தின்முன் நிறுத்தி, அப்பிரதேசத்திலிருந்து போதைப்பொருள்களை ஒழிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

666/ ' 18

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் பற்றாக்குறையான போக்குவரத்து வசதிகள் காரணமாக மக்கள் பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு முகம்கொடுக்கின்றார்கள் என்பதனையும்;

(ii) முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிகஷ்டப் பிரதேசங்களான கோட்டை கட்டிய குளம், தென்னியன்குளம், நாட்டாங்கண்டல், முத்துஐயன்கட்டு போன்ற பகுதிகளில் சீரான போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதனையும்;

(iii) முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 32 பேரூந்துகள் தேவைப்படுகின்ற நிலையில், 24 பேரூந்துகளே தற்போது காணப்படுவதோடு அதில் 20 பேரூந்துகளே பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போவுக்கு மேலும் புதிய பேரூந்துகளை வழங்கி, பொது மக்களின் வசதி கருதி பயணிகள் சேவையை மேலும் சீராக்கி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதனையும்;

(ii) ஆமெனில், எப்போது இதனை மேற்கொள்ள முடியும் என்பதனையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணம் என்னவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

806/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.02.01 ஆம் திகதி முதல் சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டு வாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) சட்டவிரோத போதைப்பொருள் ஒழிப்பிற்காக செயற்படுகின்ற அரச அல்லது அரசின் அனுசரணை பெறும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நிறுவனம் ஒவ்வொன்றினாலும் கைப்பற்றப்பட்ட சட்டவிரோத போதைப்பொருளின் அளவு தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

815/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியின்பேரில் அமுலாக்கப்படுகின்ற i ROAD கருத்திட்டத்தின்கீழ் திருகோணமலை மாவட்டத்தில் அமுலாக்க முன்மொழியப்பட்டிருந்த கருத்திட்டங்கள் யாவை;

(ii) அவை மத்தியில் அமுலாக்க அங்கீகரிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் யாவை ;

(iii) மேற்படி அங்கீகாரம் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற பொருளாதார பகுப்பாய்வு பற்றிய மதிப்பாய்வு (Economic Analysis), வாகனப் போக்குவரத்து மற்றிய ஆய்வு (Traffic Survey) மற்றும் GPS மதிப்பாய்வின் நிபந்தனைகள் அல்லது அளவுகோல்கள் தனித்தனியாக யாவை;

(iv) பதவி ஸ்ரீபுர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீபுர நகரத்திற்கு பிரவேசிப்பதற்குள்ள பிரதானமான கிராமத்திற்கூடான வீதியான ஏறக்குறைய 8 கிலோ மீட்டர் தூரத்தைக்கொண்ட சிங்கபுர வீதி இதன்கீழ் காபற் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுமா;

(v) திருகோணமலை மாவட்டத்தில் மாகாண மற்றும் நிரல் அமைச்சுகளுக்குரிய பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுகின்ற வீதிகளில் குறைந்தபட்சம் கொங்கிறீட்கூட இடப்படாத பல வீதிகள் உள்ளமையால் அவ்வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

857/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடாத்துனர்கள் மற்றும் தொழில்நுட்ப மட்டத்தைச்சேர்ந்த (PL தொகுதியின்) உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் நிறைவேற்று மட்டத்தைச்சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) PL தொகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 3/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கைக்கிணங்க சம்பளம் பெறுகிறார்களா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) PL சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு 3/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கைக்கிணங்க பதவியுயர்வு வழங்குகின்ற முறையியலொன்று நிலவுகின்றதென்பதை அறிவாரா;

(ii) இ.போ.ச. உத்தியோகத்தர்களுக்கு தற்போது பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றனவா;

(iii) ஆமெனில் மேற்படி பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்ற தரங்கள் யாவை;

(iv) பதவியுயர்வுகள் 3/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கைக்கிணங்கவா வழங்கப்படுகின்றன;

(v) இன்றேல் எத்தகைய முறையியலுக்கிணங்க;

(vi) இந்த பதவியுயர்வுகளை வழங்குவதன் மூலமாக ஒரு டிப்போவுக்கு மேலதிகமாக நியமிக்கப்படுகின்ற நிறைவேற்று உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

869/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆண்டில் உயர் கல்விக்காக விண்ணப்பித்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 30,000 என்பதோடு, அவர்களில் பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டில் தெஹிவளை உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HND) கணக்கியல் பாடநெறிக்கு 180 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை 114 வரை குறைக்கப்பட்டிருப்பது ஏன் என்பதையும்;

(iii) இவ்வாறு அனைத்து HND பாடநெறிக்கும் சேர்த்துக்கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாணவர்கள் சங்கங்கள் தாபிக்கப்படுவதற்கு முன்பு இருந்த உரிமை தற்போது இரத்துச்செய்வதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) தற்போது இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் (SLIATE) மாணவர் சங்க உரிமை இரத்து செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மாணவர் சங்கங்கள் இரத்து செய்யப்பட்டமையால் மனக்குறைகள் தொடர்பாக எத்தகைய நடவடிக்கை மேற்கொண்டாலும் அது ஒழுக்கவிரோத செயலாக கருதி தண்டனை வழங்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

901/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 வரட்சி நிவாரணம் படிமுறை I இன் கீழ் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதன் II ஆம் படிமுறையின் போது பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் எந்தவொரு பயனாளியும் தெரிவு செய்யப்படவில்லையென்பதனை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிரதேச செயலாளர் NDRSC/2018/03 என்ற இலக்கமுடைய இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தினையே கையாண்டுள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்வாரா;

(ii) செல்லுபடியாகும் NDRSC/2018/03ii என்ற இலக்கமுடைய சுற்றுநிருபத்தினை நடைமுறைப்படுத்தாதது ஏன்;

(iii) 2018.10.22 ஆம் திகதி பிரதேச செயலாளரால் பயனாளிகள் இல்லையென உரிய அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருப்பது இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாகவா;

(iv) இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தி மீறப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்வாரா;

என்பதனையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1036/ '19

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் மாவட்ட நீதிமன்றங்களில் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுள் இதுவரையில் விசாரணை செய்யப்படாத மற்றும் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற வழக்குகள் காணப்படின், உரிய வழக்கு எண்கள் மற்றும் அவை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட திகதிகளுடன் வெவ்வேறாக யாதென்பதனையும்;

(ஆ) தீர்ப்பு வழங்கப்படாத அந்த வழக்கு விசாரணைகளுள் 25 வருடங்களை விடவும் கூடிய; 20-25 வருடங்களுக்குட்பட்ட; 15-20 வருடங்களுக்குட்பட்ட; 10-15 வருடங்களுக்குட்பட்ட; 05-10 வருடங்களுக்குட்பட்ட; 01-05 வருடங்களுக்குட்பட்டதும், மேலும் பழமையான வழக்குகள் யாவையென்பதனை உரிய வழக்கு எண்கள் மற்றும் முதலில் பதிவு செய்யப்பட்ட திகதியுடன் வெவ்வேறாக யாவை என்பதனையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1039/ '19

கௌரவ விதுற விக்கிரமநாயக்க,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அன்றாடம் பெருந்தொகையான பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் நடமாடுகின்ற ஹொரண நகரம் சாதாரணமான மழை நாட்களில்கூட நீரில் மூழ்குகின்றதென்பதையும்;

(ii) அத்துடன் ஹொரண நகரத்தில் ஸ்ரீ தம்மரத்தன மாவத்த பிரதேசத்தை உள்ளிட்ட மேலும் பல பிரதேசங்கள் சாதாரணமான மழை நாட்களில்கூட நீரில் மூழ்குவதால் அப்பிரதேச வீட்டுச்சொந்தக்காரர்களின் வீடுகள், ஆதனங்கள் மற்றும் தளபாடங்கள் பல சந்தர்ப்பங்களில் சேதமடைந்ததனவென்பதையும்;

(iii) ஹொரண ஆதார வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பிரதேசமும் சாதாரணமான மழை நாட்களில்கூட நீரில் மூழ்குவதால் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளிகளும் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனரென்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) மேற்படி நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக ஹொரண நகரத்தின் வடிகான் தொகுதியை ஒழுங்கமைக்க சீக்கிரமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1048/ '19

கௌரவ அநுராத ஜயரத்ன,— நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பளை, உடபலாத பிரதேச சபைக்குரிய கலத்த, மாவத்துற, கெக்குலந்த, வெலிகங்க மற்றும் களுகல்ஹின்ன ஆகிய பிரதேசங்களில் மக்கள் நீண்டகாலந்தொட்டு தீவிரமான குடிநீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளரென்பதையும்;

(ii) இப்பிரதேசங்களுக்கு எற்புடைய நீர்க்கருத்திட்டங்களுக்காக 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு நிதிவசதிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நீரின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1053/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018/2019 பெரும்போகத்தில் அம்பாறை மாவட்டத்தில் சோளம் பயிரிடப்பட்ட காணியளவு யாது;

(ii) மேற்படி காணியளவில் சேனைப்புழு சேதம் காரணமாக அழிவடைந்த விளைநிலத்தின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கிணங்க வெவ்வேறாக யாது;

(iii) சேனைப்புழுவின் சேதம் காரணமாக அழிவடைந்த சோளச் செய்கைக்காக அம்பாறை மாவட்ட கமக்காரர்களுக்கு செலுத்திய மொத்த இழப்பீடு எவ்வளவு;

(iv) மேற்படி இழப்பீட்டுத்தொகை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கிணங்க வெவ்வேறாக எவ்வளவு;

(v) சேனைப்புழு சேதம் காரணமாக அழிவடைந்த சோளச் செய்கைக்கான இழப்பீடு கிடைக்காத பெருந்தொகையான கமக்காரர்கள் அம்பாறையை உள்ளிட்ட பல மாவட்டங்களில் உள்ளனரென்பதை அறிவாரா;

(vi) அநீதிக்கு இலக்காகிய மேற்படி கமக்காரர்களுக்காக இழப்பீடு செலுத்தப்படுமா;

(vii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?